முருகப்பெருமான் துணை

**மகான் சூலமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.09.2021, வெள்ளிக்கிழமை

1. காக்கும் சக்தியாய் வந்த குருவே
   கலியிடரை வெல்லும் ஞான குருவே
   ஆக்கம் தந்து கலியுக மக்களை
   ஆபத்தினின்று மீட்கவந்த குருவே
2. குருவே ஆறுமுக அரங்கனே
   குவலயத்தில் உன் பெருமை கூறி
   பெருமைபட பிலவ யாளி திங்கள்
   புகலுவேன் மூவாறு திகதி புகர் வாரம்
   (பிலவ வருடம் ஆவணி மாதம் 18ம் நாள், 03.09.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
   வழங்குவேன் சூலமுனிவர் யானும்
   பாரமான மக்களின் கருமவினையை
   பழுதில்லா அகற்றி வழநடத்த வந்த
4. வந்தநல் ஞான வள்ளலே
   வடிவேலன் அம்சமான அண்ணலே
   சிந்தை வைத்து உன் நாமமதை
   செபதபமாக தொடரும் மக்களுக்கு
5. மக்களுக்கு மனபயம் விலகும்
   மரணம் வெல்லும் சக்தி கூடும்
   ஆக்கமுடன் எங்கும் எதிலும்
   ஆறுமுகன் ஆசி அருள் கிட்டி
6. கிட்டியே பிறவி நோக்கமும்
   கேள்வி கல்வி ஞானமும் கூடி
   கட்டமிலா அமைதி வாழ்வும்
   காணவரும் ஞானப் பெருவாழ்வும்
7. வாழ்வினில் மேலவர் துணைபட
   வளமும் சகல பாதுகாப்பும்
   ஊழ்பற்றா செயல்பாடுகளும்
   உண்மைநிலை கூடி தெளிவு காணும்
8. காணவே அரங்க ஞானியரின்
   கருணை நிறைந்த வழியாம்
   தானமெனும் அன்னதான சேவை
   தரணியோர் தானாக வந்திணைந்து

9. இணைந்தும் தொண்டும் தொடர்பும்
இணையிலா கூடிட பொருளுதவி
துணையாகச் செய்து வருகவே
தெய்வ பலமாக அரங்கன் ஆசி
10. ஆசிபலம் கூடி உலகோர்
ஆபத்தில்லா பாதுகாப்பு தனை
நேசமுடன் கண்டு சிறப்பர்
நீதிமானாக வாழ்ந்து உயர்வர்
11. உயர்வரே முருகப் பெருமானின்
உயர்வான தயவின் நிலை கூடி
தயாபரனாக ஞானியாக மாறுவர்
தாமுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—